பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 8 (20—2—68) செவ்வாய் ★ வெளியூர்: மாசி 9 (21—2—68) புதன் [இதழ்: 207

## புதுமையான ஆரவாரம்!

புதுடில்லி, பிப். 20—

அதிக ஊதியம் கோரி புதுடில்லியில் சுமார் 2,000 பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்களும், ஆசிரியைகளும் அணிவகுத்து ஆரவாரம் செய்தார்கள்.

ஒரே மாதிரியான ஆடை அணிந்து 'லெப்ட்--ரைட்' என்ற முறையில் இவர்கள் அணிவகுத்து வந்தார்கள்.

## கல்லக்குடி பெயர் இல்லை!

## மீண்டும் கைவிரிக்கிறது புதுடில்லி!

புதுடில்லி, பிப். 19—

கல்லக்குடிக்கு 'டால்மியாபுரம்' என்ற பெயர் வைக்கப்பட்டிருப்பதை நீக்க முடியாது என்று மீண்டும் கைவிரித்திருக்கிறார் இரயில்வே அமைச்சர் திரு. பூனாச்சா!

இந்தக் கைவிரிப்புக்குப் புதிய காரணம் எதையும் கூறவில்லை; முன்பு சொன்ன அதே காரணத்தைத்தான் மீண்டும் சொல்லியிருக்கிறார்.

வடநாட்டுத் தொழில் முதலாளியின் பெயரை கல்லக்குடி இரயில் நிலையத்திற்குச் சூட்டியிருப்பதை மாற்றி, 'கல்லக்குடி' என்ற பெயரையே இடவேண்டும் என்று 1953-ல் பெரியதொரு போராட்டம் நடத்திய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், முறைப்படி டெல்லிக்கு இந்தப் பெயர் மாற்றம் குறித்து வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதற்குப் பல மாதங்கள் கழித்துப் பதில் அனுப்பிய இரயில்வே அமைச்சுத் துறை, இப்பெயர் மாற்றத்தில் தனக்கு விருப்பமில்லை என்பதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல், 'இதுபோன்ற பெயரில் வேறொரு இரயில் நிலையம் மதுரை—விருதுநகர் பாதையில் (கள்ளிக்குடி) இருப்பதால் இந்தப் பெயரை மாற்றுவதால் குழப்பம் ஏற்படும்' என்று சுற்றிவளைத்துக் காரணம் கூறியிருந்தது.

மீண்டும் தமிழக அரசு, கல்லக்குடிக்கும்—கள்ளிக்குடிக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டி, 'கல்லக்குடி என்ற பெயர் வைப்பதால் குழப்பம் எதுவும் ஏற்படாது' என்பதை விளக்கி டில்லிக்குக் கடிதம் எழுதியிருந்தது; எனினும் பழைய பல்லவியையே மீண்டும் பாடியிருக்கிறார்.

'டால்மியாபுரம் என்ற பெயரே நீடிக்க வேண்டும்' என்ற கோரிக்கையும் இரயில்வே அமைச்சுத் துறைக்கு வந்திருப்பதாகக் காரணம் காட்டப்படுகிறது.

**கல்லக்குடிக்கும்—கள்ளிக்குடிக்கும் உச்சரிப்பு அடிப்படையிலேயே பெருத்த வேறுபாடு இருக்கிறது என்பதைத் தமிழறியா டில்லி அமைச்சுத் துறைக்கு எடுத்துக்காட்டியும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. கோரிக்கையை மறுக்க வேறு நேரடியான காரணம் எதுவும் இல்லாததாலேயே இதே பதிலை மீண்டும் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறது என்றுதான் நம்ப வேண்டியிருக்கிறது.**

**தமிழ்நாட்டில் ஒரே பெயர் உடைய ஊர்களும், ஒரு பெயரின் சாயலைக்கொண்ட ஊர்களும் நிறைய இருக்கின்றன என்பதும், அவற்றை வேறுபடுத்திக் காட்ட ஆங்கில எழுத்துக்களில் மட்டுமே மாற்றம் செய்து, தமிழில் ஒரேவித உச்சரிப்புடனேயே வழங்கும்படியாகப் பல இரயில் நிலையங்கள் இன்றும் இருந்துவருகின்றன என்பதும் தமிழறியா இரயில்வே அமைச்சர் பூனாச்சாவுக்கு வேண்டுமானால் புரியாமலிருக்கலாம்; பூனாச்சாவின் பதிலைக் கேட்டு டெல்லி அரசின் உள்ளக்கிடக்கையைத் தமிழ் மக்கள் மிக நன்றாகப் புரிந்துகொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.**

**தமிழக அரசின் பொதுப் பணித்துறை யமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், முன்பே இதுபற்றிச் செய்தியாளர்களிடம் பேசுகையில், 'டெல்லி மறுத்துவிட்ட போதிலும், கல்லக்குடி என்று பெயர் வைக்கும் வரையில் தமிழக அரசு தொடர்ந்து முயற்சி செய்யும்' என்று அறிவித்திருப்பது நினைவுகூரத்தக்கது.**

## 'இலட்சிய குடும்ப'த்துக்கு அபராதம்

புதுடில்லி, பிப். 20—

ரூ. 864.50 கோடி வரவும்—ரூ. 891.50 கோடி செலவும்—ரூ. 27 கோடி பற்றுக்குறையும் கொண்ட இரயில்வே வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்ற மக்களவையில் அளித்த இரயில்வே அமைச்சர் சி. எம். பூனாச்சா, துண்டுவிழும் தொகையை ஈடு செய்வதற்காக இரயில்வேக் கட்டணங்கள் அனைத்தையும் அதிகரித்திருப்பதாகவும் அறிவித்தார்.

உயர்த்தப்பட்டுள்ள கட்டணங்களினால் ரூ. 28 கோடி அதிக வருவாய் கிடைக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது; இது, துண்டு விழும் தொகையை ஈடு செய்வதுடன், ரூ. 1 கோடி அளவில் அதிக வருவாய் கிடைக்கவும் வகை செய்திருக்கிறது.

இரயில்வேத் துறை அமைச்சர், 'பயணம் செய்வோர் டிக்கெட்டின் மீது 5 காசு முதல் 25 காசுகள்வரை தற்காலிகமாகக் கூடுதல் வரி விதிக்கப்படும்' என்று கூறியபோது, இருதரப்பிலுமிருந்து எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன! 'வெட்கம், வெட்கம்' என எதிர்க்கட்சியினர் குரலெழுப்பினர்!

"மூன்றும் வகுப்புப் பெட்டியில் தூங்கும் வசதிக்கு ரூ. 4 கட்டணம் விதிக்கப்படும்" என அமைச்சர் அறிவித்தபோது, எதிர்க்கட்சியினர் 'வேண்டாம், வேண்டாம்' எனக் குரலெழுப்பினர்! காங்கிரசு உறுப்பினர் ஒருவர், 'ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுவாராக' எனக் கூறினார்! 'தண்ணீரில் விழுந்து மூழ்குங்கள்' என்று மற்றொரு குரல் ஒலித்தது!

"மந்த நிலையை நோக்கித் தொழில் துறை சென்றுகொண்டிருக்கிறது; இதனைச் சமாளிக்க எல்லாவித உதவியும் தேவைப்படுகிறது; இந்த நிலையில், ரூ. 25 கோடி வருமானம் கிடைப்பதற்காக பயணிகள் - சரக்குக் கட்டணங்களை உயர்த்தியிருப்பது விசித்திரமாக இருக்கிறது; இதன் விளைவாகப் பண வீக்கம் ஏற்படும்; சாதாரண மக்களையும், தொழில் துறையினரையும் பாதிக்கும் நிலை உருவாகும்" என்று வர்த்தகச் சங்கத் துறைகளிலிருந்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"வரி விதிப்புப் பிரேரணைகள் தென்னகத்துக்கு எதிரானவை" என்று தென்னக உறுப்பினர்கள் சிலர் வேடிக்கையாகக் கூறியுள்ளபோதிலும், கட்டண உயர்வின்றி, புதுடில்லியிலிருந்து தென்னிந்தியர் குடும்பம் ஒன்று பயணம் செய்வதானால், இனி ரூ. 100 கூடுதல் செலவாகும்.

சென்னை, ஆந்திரம், மைசூர் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று வரும் தென்னிந்தியர் குடும்பம் 3-வது வகுப்பு மூன்றடுக்குத் தூங்கும் வசதிப் பெட்டியில் கூடுதல் கட்டணமின்றி 2+2 இரவுகள் பயணம் செய்துவந்தன; அமைச்சர் சந்திரசேகரின் 'இலட்சியக் குடும்ப'த்தை (கணவன் -- மனைவி -- மூன்று குழந்தைகள்) கணக்கில் கொண்டாலும், போகவர ரூ. 80 அதிகமாகச் செலவாகும். கேரளத்துக்காரர்கள், மேலும் 50 சதவிகிதம் தரவேண்டியிருக்கும்.

## தனியார் துறைக்கு ஆக்கம் தரும் இரயில்வே வரவு-செலவுத் திட்டம்!

**இந்த ஆண்டுக்கான இரயில்வே வரவு—செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது; உயர்ந்திருக்கிற பண்டங்களின் விலைகள் குறைந்திட வழி செய்யாவிட்டாலும் விரைந்து உயர வகைசெய்யும் திட்டம் இது!**

**பொதுத் துறையை அழித்துத் தனியார் துறைக்கு ஆக்கம் தருகிற முனைப்பில் திட்டமிட்ட மறைமுகத் திட்டம் இது! எல்லாரையும் எல்லா வகையிலும் எல்லா நிலையிலும் பாதிக்கும் வரவு--செலவுத் திட்டம்!**

பயணக் கட்டணம் 5-காசுமுதல் 25-காசுவரை உயர்ந்திருப்பது ஏழைகளைப் பாதிக்காது என்பது, சொல்லச் சுவையாக இருக்கலாம்; நடைமுறையில் அப்படி இல்லை!

பிளாட்பாரம் நுழைவுக் கட்டணம் 20-காசு என்று உயர்த்தி இருப்பது மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் மாபெரும் அநீதி!

50 நிமிட நேரம் நாடாளுமன்றத்தில் நின்று இந்த வரவு—செலவுத் திட்டத்தைப் படித்து அளித்த இரயில்வே அமைச்சர் பூனாச்சா அவர்கள், எவ்வளவுதான் சுவையாக—நா நயமாக, 'இது மிக மிகத் தற்காலிகமான ஒரு கட்டண உயர்வே; நிலைமை சரியானதும் மீண்டும் பழைய கட்டணமே இருக்கக்கூடும்' என்றெல்லாம் குழைந்தும்கூட, மன்றத்தின் எல்லாத் தரப்பிலிருந்தும் வெளிப்பட்ட எதிர்ப்புக் குரல்கள், இந்த வரவு--செலவுத்திட்டத்தின் பாதகத்தன்மையை விளக்கிடப் போதுமானது!

இலாப நோக்கோடு நடத்தப்பட்ட வெள்ளைக்கார இரயில் கம்பெனிகள், 'பிளாட்பாரத்தில் நுழைந்தாலே கட்டணம்' என்று பேருக்கு வைத்திருந்த நிலையை, விடுதலைபெற்ற பிறகாவது நீக்கியிருக்கவேண்டும்; மாறாக, இன்னமும் அதை உயர்த்திக்கொண்டுபோவது, மத்திய அரசு மக்களின் நன்மைகளை மனத்தில் கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது.

செலவை உயர்த்திக் காட்டி—நட்டம் ஏற்படுவதாகச் சொல்லி—அதை ஈடுகட்ட வரி போடுவதாகச் சொல்லும் தந்திரம் யாருக்கும் புரியாத ஒன்றல்ல; ஆனால், அதற்காக அமைச்சர் பூனாச்சா சொல்லும் காரணங்கள்தாம் அமைவுடையனவாக இல்லை!

சாதாரண கடைக்காரர்களிடம், 'என்னய்யா; எண்ணெய் விலையை இப்படி உயர்த்திவிட்டீரே' என்று கேட்டால், 'என்னங்க செய்வது? வேர்க்கடலை விலை அமோகமாக ஏறிவிட்டது; வெல்லப்பாகின் விலை மட்டும் என்ன கொஞ்சமா? செக்குத் தொழிலாளிகள் கூலியையும் உயர்த்தியாகிவிட்டது; பின், எப்படி எண்ணெய் விலை குறைவாகும்?' என்று சொல்லுகிற சாதாரண வணிகரைப்போல் அமைச்சர் பூனாச்சா பேசியிருக்கிறார்! 'மின்சாரம், நிலக்கரி விலைகள் உயர்ந்திருப்பதாலும், ஊழியர் சம்பளம் போன்றவைகள் கூடியிருப்பதாலும் இப்படிச் செலவு உயர்வதாக'ச் சொல்லுவது மிகவும் கொச்சையாகக்கூட இருக்கிறது!

பயணிகள் கட்டணம் மட்டுமன்றி பண்டப் போக்குவரத்துக்கட்டணமும் மிகவும்உயர்த்தப்பட்டிருக்கிறது. அதை அறிவித்தபோது, 'செய்தித் தாள்கள், பால், கறிகாய்களின்மீது இந்த உயர்வு இராது' என்று குறிப்பிட்டு, அதனால் இந்தப் பண்டங்களின் மீதான விலை உயர்வு தவிர்க்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**அப்படியானால், தாம் விதித்திருக்கும் கட்டண உயர்வு மூலமாகப் பிற பண்டங்களின் விலை உயரும் என்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டிருப்பதாகத்தானே பொருள்?**

**இப்படி விலை உயரும் வரி விதிப்புகளை மத்திய அரசு அதிகப்படுத்திக்கொண்டே போவது, விலைகளைக் கட்டுப்படுத்த மாநில அரசு மேற்கொள்ளும் முயற்சிகளைப் பொடிப்பொடி ஆக்கிவிடுகிறது! தமிழகக் காங்கிரசார் இதை மனத்தில் இருத்திக்கொள்வது அறிவுடைமை ஆகும்!**

அதுமட்டுமன்றி ஏற்கனவே 'இரயில் பாதை மூலம் அனுப்பப்படும் பண்டங்கள் விரைவாகவும் முறையாகவும் குறிப்பிட்ட இடம் போய்ச் சேருவதில்லை' என்று இருக்கிற நிலையை, மேலும் சிக்கலாக்கும் வகையில் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள்! அதனால், பண்டங்களை அனுப்பும் பொதுமக்கள், பொதுத்துறையில் உள்ள இரயில்வேயை விடுத்துத் தனியார் துறையில் உள்ள லாரிகள் மூலமே அனுப்பும்படி மறைமுகமாக மத்தியஅரசு தூண்டுகிறது!

**இன்னம் பச்சையாகச் சொன்னால், 'உங்கள் பண்டங்களை இரெயில் மூலம் அனுப்புவதை விடுத்து, இனி லாரிகள் மூலமே அனுப்புங்கள்' என்று மத்திய அரசு பிரசாரம் செய்கிறதாகவே பொருள்!**

**ஏனென்றால், அடுத்த ஆண்டில், 'பண்டப் போக்குவரத்து இரெயில் மூலம் இலாபகரமாக இல்லாமையால் அதை மூடிவிட அரசு முடிவு செய்திருப்பதாக' அவர் சொல்லக்கூடும் அல்லவா?**

இன்னொன்று; இலாபம் இன்மையால், சில பாதைகளை அடைத்துவிட அரசு முடிவு செய்திருப்பதாகச் சொல்வது, மக்கள் நலனைக் கருத்தில் கொண்டதாக இல்லை. இலாப – நஷ்டக் கணக்கை மொத்தமாகப் பார்க்க வேண்டுமேயன்றி, தனித் தனிப் பாதையாக அல்ல.

இரெயில்வே ஊழியர் உரிமைக்குப் போராடும் நேரத்தில், 'மக்களின் இன்றியமையாத் தேவையான இந்தத் துறையில் போராட்டமா?' என்று அங்கலாய்க்கும் மத்திய அரசு, இதை Essential Service-ஆகக் கருதி, இலாப-நஷ்டம் கருதிப் பாதையை மூடும் யோசனையைக் கைவிடுவது நல்லது.

சீசன் டிக்கெட் பற்றி மத்திய அமைச்சரின் மேற்போக்கான ஒரு குறிப்பு, அடுத்த ஆண்டில் கணிசமான அளவில் அந்தக் கட்டணத்தைக் கூட்ட இருப்பதற்கான ஒரு சூசகமான அறிவிப்பாகவே தோன்றுகிறது!

ஆக மொத்தத்தில், மத்திய அமைச்சர் பூனாச்சா அவர்கள் தயாரித்தளித்திருக்கும் இரெயில்வே வரவு – செலவுத் திட்டம் மிகவும் பாதகமான ஒரு திட்டம்!

## புதுவை அமைச்சரவை பதவி விலகியதேன்?

பரூக் மரைக்காயரை முதலமைச்சராகக் கொண்ட புதுச்சேரி அமைச்சரவை, பதவியிலிருந்து விலகிவிட்டது.

சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவராக மீண்டும் வெங்கடசுப்பா ரெட்டியாரைத் தேர்ந்தெடுக்க இயலும் பொருட்டு, முதலமைச்சர் பதவியை இராஜிநாமா செய்யுமாறு காமராசர் தெரிவித்திருந்த யோசனைக்கிணங்கவே, பரூக் மரைக்காயர் அமைச்சரவை பதவியிலிருந்து விலகிவிட்டது.

# சி. சுப்பிரமணியம் பேச்சும் எதிர்க் கட்சித் தலைவர் வாதமும்

## அவைத் தலைவர் ஆதித்தனரின் தீர்ப்பு விவரம்

சென்னை, பிப். 19—

சட்டப் பேரவையில், திரு. சி. சுப்பிரமணியம் மீதும், 'இந்து' பத்திரிகை மீதும் கழக உறுப்பினர் இளம்வழுதி எழுப்பியிருந்த உரிமைப் பிரச்சினைமீது பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டதாவது :—

"திண்டுக்கல்லில் திரு. சி. சுப்பிரமணியம் பேசியதாக 'இந்து' பத்திரிகையில் வெளிவந்துள்ள வாசகம் தவரு என்று பார்ப்பது இந்தப் பேரவையின் பொறுப்பாகும்.

சுப்பிரமணியம் சொன்னதாகச் சொல்லப்படுவது, பார்த்த அளவில் — முதல் தோற்றத்தில் 'உரிமைப் பாதிப்பு இருக்கிறதா' என்று நான் பார்த்த அளவில் எனது கருத்தைத் தெரிவிக்கிறேன்.

எனது ஆய்வுக்கு, எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமனும் பெரிதும் உதவியிருக்கிறார். அவர் தமது விளக்கத்தில் நான்கு அம்சங்களைத் தெரிவித்தார்; 'சாதாரணக் குடிமகனுக்கும் பேச்சு உரிமை உண்டு' என்றார் அவர்; ஆனால், அரசியல் சட்டம் 19-வது பிரிவில் பேச்சுரிமை பற்றியும் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. 'பேச்சுரிமையின் பேரால் எதையும் பேசலாம்' என்பதில்லை; 'சட்டத்துக்கு உட்பட்டுப் பேசுவது' என்றுதான் இருக்கிறது. அரசியல் சட்டம் 194-வது விதிக்கு உட்பட்டுத்தான் உறுப்பினர் இளம்வழுதி, இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்.

நிறைவேற்றிய தீர்மானத்தைத்தான் சி. சுப்பிரமணியம் 'மோசடி' என்றாரே தவிர, 'சபையை அல்ல' என்று எதிர்க் கட்சித் தலைவர் வாதிட்டார்.

'திருட்டு' என்பது குற்றம் என்றால், 'திருடியவர்கள்மீது குற்றமில்லை' என்று கூறுவதுபோல் ஆகும் இது; எனவே, 'தீர்மானம் மோசடி' என்றால், அது இந்த அவையின் தன்மையையும் குறிப்பதாகும்.

'பத்திரிகைச் செய்தியை ஆதாரமாகக்கொண்டு உரிமைப் பிரச்சினை எழுப்பக்கூடாது' என்று ஏற்கனவே இருந்த அவைத்தலைவர்கள் பலமுறை தீர்ப்பு வழங்கியிருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் கூறினார். நானும், கடந்த 10 ஆண்டுப் பதிவேடுகளையெல்லாம் துருவித் துருவிப் பார்த்துவிட்டேன்; ஒன்றில்கூட அதற்கு ஆதாரம் இல்லை.

'மோசடி' என்பதுதான் தவறு; 'அரசியல்' என்ற சொல்லைச் சேர்த்து 'அரசியல் மோசடி' என்று சொன்னதால், 'மோசடி' என்பதில் உள்ள விஷத்தன்மை போய்விட்டதாக ஓர் இடத்திலும், குறைந்துவிட்டதாக மற்றொரு இடத்திலும் எதிர்க் கட்சித் தலைவர் கூறியிருக்கிறார்.

இந்த அவையின் அலுவல் முறைகளே அரசியல் தொடர்பானதுதான்; வேண்டுமானால், இரங்கல் தீர்மானங்கள் அரசியல் சார்பற்றவையாக இருக்கலாம். எனவே, 'அரசியல்' என்று அவர் குறிப்பிட்டது வெறும் அலங்காரத்துக்குத்தானே தவிர விஷத்தைக் குறைப்பதற்கு அல்ல. அப்படிச் சொல்லாமல் இருந்தாலும், இந்தச் சபையின் அலுவல், அரசியல் சம்பந்தமானதுதான். இந்த அலுவலை, 'மோசடி' என்று மட்டும் கூறவில்லை—மோசடியை மூன்றாகப் பிரித்து, 'பெரிய மோசடி' (Biggest Fraud) என்று கூறியிருக்கிறார்.

இப்படியெல்லாம் அவர் பேசியிருப்பது—பத்திரிகையில் வெளியாகியிருப்பது உண்மையானால்—இதனை உரிமை ஆய்வுக் குழு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள உரிமையிருக்கிறது; எனவே, அதன் ஆய்வுக்கு அனுப்பிவைக்கிறேன்."

# உள்நோக்கம்

## கற்பிக்கும் வகையிலேயே சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்

### உரிமைப் பிரச்சினைமீது இரெ. இளம்வழுதி விளக்கவுரை

சென்னை, பிப். 19—

சட்டமன்றத்தில், சி. சுப்பிரமணியம் மீதும், 'இந்து' பத்திரிகை மீதும் கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சினையை, 'சட்டப் பேரவையே விசாரிக்க வேண்டும்' என்ற தமது தீர்மானத்தின்மீது கழக உறுப்பினர் திரு. இளம்வழுதி பேசுகையில் தெரிவித்ததாவது :—

திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், திண்டுக்கல் நகர காங்கிரசு மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில், நமது சட்டப் பேரவை நிறைவேற்றிய மொழித் தீர்மானத்தை, 'பெருத்த அரசியல் மோசடி' என்று வர்ணித்திருக்கிறார். இதுபற்றி சட்டப் பேரவைத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் தெரிவித்த கருத்துக்குத் தக்க பதிலளித்துத் தீர்ப்பளித்திருக்கிறார்.

இந்தப் பிரச்சினை எழுப்பி ஒரு வார காலத்துக்கு மேலாகிறது; பிரச்சினைக்குரியவர்களும் சாதாரண மானவர்கள் அல்லர். திரு. சுப்பிரமணியம் 30 ஆண்டுக் காலம் அரசியலில் இருந்து—10 ஆண்டுக்குமேல் அமைச்சராக இருந்து—இப்போது தமிழ் நாடு காங்கிரசுக் கட்சிக்குத் தலைவராக இருப்பவர்; மத்திய அரசிலும் மாநில அரசிலும் அமைச்சராக இருந்தவர்.

'இந்து' பத்திரிகையும் சாதாரணமானதல்ல—பழம்பெரும் மதிப்பு வாய்ந்த ஏடாகும். அவரோ, அந்தப் பத்திரிகையோ இதுவரை மறுப்பு எதுவும் வெளியிடவில்லை.

திரு. சுப்பிரமணியம் மறுப்பு வெளியிடாதது மட்டுமல்ல— மேற்கொண்டும் இதுபற்றிப் பேசியிருக்கிறார்—" தி. மு. க. அரசும் அதன் முதலமைச்சரும், இந்தியை ஒழித்துவிட்டதாகப் பெருமைப்படுகிறார்கள்; 'அரசியல் சட்டத்தைத் திருத்த முடியாது' என்று அவர்களுக்குத் தெரியாதா?" என்று பேசியிருக்கிறார்.

அரசியல் சட்டம் எத்தனை முறை திருத்தப்பட்டிருக்கிறது என்பதை சுப்பிரமணியம் அறியாரா? அவருக்கு நன்றாகத் தெரியும்.

அரசியல் சட்டம் 8-வது ஷெட்யூல்டில் உள்ள 14 தேசிய மொழிகளுடன் 'இந்தி' மொழியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்—என்று அண்மையில் கிளர்ச்சி செய்து, சேர்த்துக் கொண்டும்விட்டார்கள். அது எப்படி முடிந்தது? அதற்கு மட்டும் அரசியல் சட்டம் எப்படி இடம் கொடுத்தது?

அடுத்து, 'இராஜஸ்தானி மொழியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்று இராஜஸ்தானியர் இப்போது குரலெழுப்பியிருக்கின்றனர்; 'முப்பது இலட்சம் பேர் மட்டுமே பேசும் சிந்தி மொழியை ஒரு தேசிய மொழியாகச் சேர்த்திருக்கும்போது, ஒருகோடி பேர் பேசும் இராஜஸ்தானியை ஏன் அரசியல் சட்ட 8-வது ஷெட்யூல்டில் சேர்க்கக்கூடாது?' என அவர்கள் வாதாடியிருக்கின்றனர். இதையெல்லாம் அறிந்த சுப்பிரமணியம்தான், நாம் நிறைவேற்றிய தீர்மானத்தைக் கேலி செய்து பேசியிருக்கிறார்!

'அரசியல் சட்டத்தை எப்போதுமே மாற்ற முடியாது' எனத் தீர்மானம்போட்டா வைத்திருக்கிறார்கள்? 'தேவையான நேரத்தில் — தேவையானவற்றைத் திருத்திக்கொள்ளலாம்' என்றுதானே எழுதிவைத்திருக்கிறார்கள்?

மாற்றார் கோட்டையில் கொடி பறக்க விட்டுவிட்டதாகச் சொந்தக் கோட்டையில் கொடி போட்டுக்கொண்டு பேசுவதாக சுப்பிரமணியம் பேசியிருப்பது நியாயமா? அவருடைய கருத்து தவறான உள்நோக்கம் கற்பிப்பதாகாதா?

நமது தீர்மானத்தின் கடைசிப் பகுதியில், 'இந்திக்குத் தனி அந்தஸ்து கொடுக்கக்கூடாது' எனச் சொல்லியிருக்கிறோம். இதுபற்றி அரசியல் சட்ட முகவுரையில் கூறப்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும். இவையெல்லாம் சுப்பிரமணியத்துக்குத் தெரியாதவையல்ல. அவருடைய கருத்து எங்கோ இருக்கிறது!

[இந்த நேரத்தில் எதிர்க் கட்சியினர் குறுக்கிட்டனர். முதலமைச்சர் அண்ணா அவர்கள் எழுந்து, 'அவைத் தலைவர் அவர்கள் தமது தீர்ப்பில் மேலெழுந்தவாரியாக உரிமை பாதிக்கப்பட்டிருப்பதாகத் தீர்ப்பளித்துவிட்டார்; அதுபற்றி இந்த அவையில் விசாரிக்க வேண்டும் என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது; இனி அதற்கான மேல் நடவடிக்கைகளை அவைத் தலைவர் எடுத்துக்கொள்ள விட்டுவிடலாம். இப்போது அதனை விவாதிக்க வேண்டாம் என்று கருதுகிறேன்' என்றார்.

உடன் தோழர் இளம்வழுதி, முதலமைச்சர் அண்ணா அவர்களின் கருத்துக்கேற்ப தமது பேச்சை முடித்துக்கொண்டு, சம்பந்தப்பட்டவர்களுக்குக் காரணம் கேட்டுக் கடிதம் (show cause notice) அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.]

# 'நீர் மட்டம் குறைந்ததால் மின்சார நிலையங்கள் இயங்கவில்லை'

## 'பாதிப்பு நிலை ஏற்படாது' என அமைச்சர் விளக்கம்

சென்னை, பிப். 19—

"நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கும் கீழே இறங்கிவிட்டதால், பெரியாறு, மேட்டூர் மின்சார உற்பத்தி நிலையங்கள் அண்மையில் மூடப்பட்டது உண்மைதான்; இதனால் மாநிலத்தில் மின்சாரத் தட்டு ஏற்படாது; அப்படி மின்சாரத்தட்டு ஏற்பட்டாலும் கருநாடக அரசு மின்சாரம் வழங்க முன்வந்திருக்கிறது; தொழிலாளர் எவரும் பாதிக்கப்படமாட்டார்கள்"

என்று சட்டமன்றத்தில் கோமதி சங்கர தீட்சிதர் கேட்ட ஓர் அவசரக் கேள்வியையொட்டித் தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் விளக்கமளித்தார்.

# மதவாதிகள் கட்சிக்குத் தடை போடுக!

## உ. பி. மாணவர்கள் கோரிக்கை

இலட்சுமணபுரி, பிப், 20—

"ஜனசங்கம், ஜமாயத் உல் உலேமா, இந்து மகாசபை, இராஷ்டிரிய சுயம் சேவக் போன்ற வகுப்புவாதக் கட்சிகள் அனைத்துக்கும் தடை விதிக்கவேண்டும்" என்று உத்தரப் பிரதேச முற்போக்கு மாணவர் கழகம் வற்புறுத்தியுள்ளது.

அண்மையில் மீரத் நகரிலும், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த வேறு சில நகரங்களிலும் நடைபெற்ற வகுப்புக் கலவரங்கள் குறித்து முற்போக்கு மாணவர் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தது.

# தமிழகத் தொழில் துறையில் மந்த நிலையா?

## எதிர்க் கட்சியினர் கூற்றுக்கு அமைச்சர் பதில்

சென்னை, பிப். 19—

"இந்த அரசு பதவியேற்றதிலிருந்து ஜுன் 15-ம் நாள்வரையில், 10 புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு அனுமதி (லைசென்சு) அளிக்கப்பட்டுள்ளது; இதற்கு முன் அனுமதிக்கப்பட்டவைகளில் ஐந்து தொழில்கள் இந்தக் காலத்தில் தொடங்கப்பட்டிருக்கின்றன; சென்ற ஆண்டு இதே காலத்தில் இரண்டு தொழில்கள் தொடங்கப்பட்டன"

என்று தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

மேலும் துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்ததாவது :—

"தொழில் துறையில் மந்தநிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறுவதற்கு ஆதாரமில்லை; 'இந்த அரசின் தொழில் கொள்கை தெளிவில்லாமல் இருப்பதால், தொழிலதிபர்கள், மைசூர் போன்ற வெளி மாநிலங்களில் புதிய தொழில்களைத் துவங்கச் சென்றுவிடுகிறார்கள்' என்பதெல்லாம் சரியில்லை; இங்கே தொழில் துவக்க யாரும் அச்சமடைந்ததாகவும் தகவல் இல்லை.

"எனக்குத் தெரிந்தவரையில், வெளி மாநிலங்களிலிருந்தெல்லாம்—பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களிலிருந்தெல்லாம் புதிதாக இங்கு வந்து தொழில் துவக்குவதில்தான் ஆர்வம் காட்டுகிறார்கள்.

"மற்ற மாநிலங்களைவிட இந்த மாநிலம் தொழில்துறையில் முன்னணியில்தான் இருந்து வருகிறது.

"சிறு தொழில்களுக்கு ஓர் இலட்சரூபாய் கடன் கொடுப்பதை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம்.

"மத்திய அரசின் நாணய மதிப்பின் காரணமாகத் தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டிருப்பதாக, பல சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொருளாதார – தொழில்துறை வல்லுநர்கள் மட்டுமன்றி இந்த அரசும் தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறது."

# கோடரிக்காம்புகளை உருவாக்கும் காங்கிரசு

## ஆட்சிக் கவிழ்ப்புக்கு முற்றுப் புள்ளி வைக்க மறுதேர்தல்!

### எதிர்க் கட்சிகளுக்கு எஸ். எம். பானர்ஜி யோசனை

புதுடில்லி, பிப். 20—

"நாடெங்கிலும் மறுதேர்தல் நடத்தி, கட்சி தாவுதல்களுக்கும் அரசியல் பேரங்களுக்கும் முடிவுகட்ட மத்திய அரசை வலியுறுத்தும் வகையில், எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும்"

என்று, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். பானர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"கூட்டணி ஆட்சிகளை ஒவ்வொன்றாகக் கவிழ்த்துவரும் மத்திய அரசின் போக்குக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது; இதன் பொருட்டுப் பாடுபட அனைவரும் ஒற்றுமையுடன் முன் வாருங்கள்"

என்று, எதிர்க் கட்சியினர் அனைவருக்கும் பானர்ஜி அழைப்பு விடுத்து, மேலும் கூறியிருப்பதாவது :—

"கைப்பாவைகளின் மூலம் மாநிலங்களில் மீண்டும் அதிகார உரிமைகளைப் பெறக் காங்கிரசுக் கட்சி மறைமுகமாக முயற்சி செய்துவருகிறது என்பதற்கு அரியானா, மேற்கு வங்கம், பீகார் ஆகிய மாநிலங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன; இதுபோன்ற நிலை மேலும் தொடராமலிருக்க நாடு முழுவதும் மறு தேர்தல் நடத்தியாக வேண்டும்.

"எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, 'மறு தேர்தல் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை' என்று மத்திய அரசு உணரும் நிலையை உருவாக்க வேண்டும். கடந்த காலத்திலும்— தற்போதும் பல முறைகேடான செயல்களைச் செய்து வந்துள்ள காங்கிரசு, வாக்காளர்களைச் சந்தித்து வாக்குச் சேகரிக்கவே முடியாத நிலை மறு தேர்தலின்போது ஏற்பட்டுவிடும்."

# நாடாளுமன்ற மேலவைத் தேர்தல்

## காமராசர் போட்டியிடமாட்டார்

புதுடில்லி, பிப். 20—

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த காங்கிரசுப் பெருந்தலைவர்களையெல்லாம் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்களாக்கிவிட நிஜலிங்கப்பா விரும்புவதாகத் தெரிகிறது.

பொதுத் தேர்தலில் தோல்வி கண்ட மேற்கு வங்கக் காங்கிரசு முக்கிய புள்ளியான அதுல்யா கோஷுக்கு, நாடாளுமன்ற மேலவையில் காலியாகும் இடங்களில் ஒன்றை வழங்க வேண்டுமென்று அவர் கருதுவதாகக் கூறப்படுகிறது.

அனைத்திந்திய காங்கிரசுக் கட்சியின் பழைய பொதுச் செயலாளரான டி. மேனியனையும் இதுபோலவே உறுப்பினராக்கிவிட நிஜலிங்கப்பா விரும்புவதாகத் தெரிகிறது. மேனியனும் கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தவராவார்.

தமிழகச் சட்டமன்றத்தின் மூலம் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக காமராசர் தேர்ந்தெடுக்கப்படக்கூடும் என்று முன் வந்த தகவல் மறுக்கப்பட்டிருக்கிறது. தற்சமயம் உறுப்பினராக இருக்கும் உள்துறை துணை அமைச்சர் இராமசாமியே மீண்டும் அந்த இடத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரிகிறது.

## தமிழக மருத்துவர்கட்கு இராஜஸ்தான் அழைப்பு!

ஜெய்ப்பூர், பிப். 20—

இராஜஸ்தானில் பெரும் அளவுக்கு டாக்டர்கள் பற்றாக்குறை இருந்துவருகிறது. மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள அரசினர் மருத்துவமனைக்கு 700 மருத்துவர்கள் தேவைப்படுவதாகக் கூறப்படுகிறது.

பட்டம்பெற்ற மருத்துவர்கள் பெரும்பாலும் கிராமப்புறங்களுக்குச் சென்று பணியாற்ற முன் வருவதில்லை; இதன் விளைவாக, கிராமப் பகுதிகளில் உள்ள 232 மருத்துவமனைகளில் சுமார் 100 மருத்துவமனைகள், மருத்துவர்கள் இன்றியே இயங்கிவருகின்றன.

அதே நேரத்தில் ஜெய்ப்பூர், ஜோத்பூர், பிகானீர், உதயப்பூர், ஆஜ்மீர் போன்ற நகர்ப்புறங்களைச் சேர்ந்த மருத்துவமனைகளில், தேவைக்கும் அதிகமாகவே டாக்டர்கள் இருந்துவருகின்றனர்; ஆனால், அதிகப்படியாக உள்ள டாக்டர்களைக் கிராமப்புறங்களுக்குச் செல்லவைக்க நிர்வாகம் எவ்வளவோ முயன்றும், அந்த முயற்சியில் வெற்றி கிட்டவில்லை.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க இராஜஸ்தான் அரசு, தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் உள்ள மருத்துவர்களை இராஜஸ்தானுக்கு அனுப்பி வைக்குமாறு அந்தி மாநிலங்களின் அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## காங்கிரசார் மீது ஊழல் விசாரணை

### டில்லி நிர்வாகம் மேற்கொள்ளும் வாழ்க்கைச் செலவுப்புள்ளி

புதுடில்லி, பிப். 20—

புதுடில்லியின் நிர்வாகத்தை மேற்கொண்டுள்ள ஜனசங்கம், முன்பு தலைநகரின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்த காங்கிரசுக் கட்சியினர்மீது கூறப்பட்ட ஊழல் புகார்கள் குறித்து விசாரணை செய்யும்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பழைய நிர்வாகிகள்மீது ஊழல் விசாரணை நடத்தத் தற்போதைய டில்லி நிர்வாகம் ஒரு குழுவை நியமித்துள்ளது; நிர்வாகத்தில் முன்பு நடைபெற்றதாகக் கூறப்படும் பெரும் ஊழல்களைக் குறித்து அது விசாரணை நடத்தும்.

## கோவை மாவட்டப் பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

கோவை மாவட்டப் பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுப் பேரவைக் கூட்டம், மாவட்டத் தலைவர் பி. பெரியசாமி தலைமையில் நடைபெற்றபோது, 1968-ம் ஆண்டிற்கான தலைமைச் சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; விவரம் :—

தலைவர்: பி. பெரியசாமி; துணைத் தலைவர்கள் : சாமிநாதன், கந்தசாமி; பொதுச்செயலாளர் : காட்டூர் கோபால்; துணைச்செயலாளர்கள் : பி. கோபால், ஏ. ஜி. இராசு; பொருளாளர் : டி. முத்து; செயற்குழு உறுப்பினர்கள் : ஆர். கோபால், ஆர். சீனிவாசன், என். நல்லமுத்து, எம். அய்யாசாமி, எம். பழனியப்பன், குப்புசாமி, குமாரவேலு, குருசாமி, எம். காந்தி.

மதிப்புரை

## ‘இந்திக்கு இங்கே இடமில்லை’

அரிய எதனையும் பத்திரப்படுத்தாதலால் அல்லது அச்சினில் பதிவு செய்யாததால் தமிழர்கள் அன்றுமுதல் இழந்துவந்திருக்கும் செல்வங்கள் ஏராளம்!

‘இனியும் அதுபோன்ற பாதகங்கள் எழக்கூடாது’ என்ற விழிப்பு, அண்மைக் காலமாக அரும்பி மலர்ந்து வருகிறது!

குறிப்பாக, கழக வரலாற்றில் நடைபெறும் முக்கியச் சம்பவங்கள் — தலைவர்கள் ஆற்றும் உரைகள் ஆகியவை, இப்போதெல்லாம் அவ்வப்போது புத்தக வடிவில் வெளிவருவது பாராட்டுதற்குரியது.

வெளியீட்டாளர்களுக்குப் பொருளாதார அடிப்படையில் பிரதிபலன் இல்லை என்ற ஒரு நிலை இருந்தாலும், அவர்களது தொண்டும் கடமையும் சிறப்பானவை என்பதில் ஐயமிருக்க முடியாது.

தமிழக வரலாற்றில் மட்டுமல்லாமல், இந்தியச் சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட கழக அமைச்சரவையின் 23-ந் தேதிய சட்டமன்றத் தீர்மானத்தின் போது, மொழிப் பிரச்சினை குறித்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆற்றிய — காலத்தால் மறக்க முடியாத—பேருரையினை, ‘முத்தாரம்’ தினகரன் அவர்கள், தலைவன் பதிப்பகத்தின் சார்பில் புத்தக வடிவில் கொணர்ந்திருப்பதன் மூலம், ‘செயற்கரிய செயல்’ ஒன்றினைச் செய்திருக்கிறார்.

நாளிதழ்களால் பதிப்பித்து வெளியிடப்பட்ட அம்த உரையினை முழுவதுமாகப் படிப்பதற்கு ஆவல் கொண்டுள்ள உள்ளங்களைத் திருப்தியடையச் செய்யும் வகையில், தோழர் தினகரன், ‘இந்திக்கு இங்கே இடமில்லை’ என்ற தலைப்பில் அண்ணா அவர்களின் பேருரையை, தக்க முறையில் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

‘பாராட்ட வேண்டிய முயற்சி’ என்று வழக்கமாகக் கூறுவதை விட, ‘நன்றி தெரிவித்துக் கொள்ளவேண்டிய ஒன்று’ எனக் கூறுவதுதான் பொருந்தும்.

விலை 50 காசு

கிடைக்குமிடம் :—
தலைவன் பதிப்பகம்,
2/46, அம்மையப்ப முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

—எஸ். ஆர்.

### முகவரி மாற்றம்

புலவர் வேங்கைமார்பன்,
நகர தி. மு. க. செயலாளர்,
8, பழைய செஞ்சி சாலை,
விழுப்புரம்.

நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது—அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

# சரியான ‘பாக்கிங்’ முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்பநிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த ‘பாக்கிங்’ முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி ‘பாக்’ செய்தால் இப் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் ‘பாக்’ செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை.

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற ‘பாக்கிங்’ முறைகளை சிபாரிசு செய்வது. உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகரடின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த ‘பாக்கிங்’முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக் குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில் சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB

மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான பாக்கிங்

# கோட்டைவிடும்கோமான்களின் ‘வெற்று’க் கோஷம்!

## உள்நாட்டுத் ‘தர்பார்’ வெளிநாட்டு விவகாரத்தில் என்ன ஆயிற்று?

குசராத் மாநிலத்தின் கட்ச் ரண் பகுதியில் உரிமை கொண்டாடிய பாகிஸ்தான் ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது. அந்தப் பகுதியின் 10 சதவிகித பரப்பளவுள்ள 350 சதுரமைல் நிலப் பரப்பு அதற்கு உரிமையானது என்று சர்வதேச டிரிப்யூனல் தீர்ப்பளித்திருக்கிறது.

1965-ம் ஆண்டில் காங்கிரசு ஆட்சியினர் செய்துகொண்ட ஒப்பந்தப்படி பார்த்தால், சர்வதேச டிரிபியூனலின் முடிவை ஒப்புக்கொள்வதுதான் அரசியல் நாகரிகம் என்ற நிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

எத்தனை சதுர மைல் பரப்பு பாகிஸ்தானத்துக்குச் சேருகிறது என்பதல்ல நாம் கவனிப்பது; இன்றளவும் நமது ஆதிபத்திய எல்லைக்குள் உரிமை பாராட்டும் மாற்றாரின் வாதங்கள் எடுபடக்கூடிய அவல நிலைக்கு ஆளாகிக் கிடக்கிறோமே என்பதுதான் நம்மை வறுத்துகிறது.

“இந்தியாவைச் சிதறவிடுவதற்கு ஒருகாலும் உடன்படமாட்டோம்; பிரிவினைச் சக்திகளை முறியடிப்போம்” என்று உள்நாட்டில் இல்லாத ஒரு பொருளைப் பற்றி நாள்தோறும் தெருக்களில் பேசித் திரிந்து அரசியல் வாழ்வு நடத்தும் காங்கிரசுத் தோழர்கள், இப்போது மறு பேச்சின்றி 350 சதுர மைல் பரப்பளவைப் பாகிஸ்தானுக்குத் ‘தாரை’ வார்த்துக் கொடுக்கப்போகிறார்கள்!

காங்கிரசுக்காரர்களின் வாய்வீச்சு நாட்டில் மாற்றுக் கருத்துக் கொண்ட எதிர்க் கட்சிகளிடையில்தான் முழங்குகிறதே தவிர, செயல் முறையில் ஒவ்வோராண்டும் சிறுகச் சிறுக நாட்டின் எல்லைகளைக் குறுக்குவதாக இருக்கிறது!

அரசியல் வாழ்வுக்காக நாட்டின் எல்லைக் கோடுகளை—ஏதோ காங்கிரசாரின் சொந்த ‘எஸ்டேட்’டுகளை விற்பனை செய்வதைப் போல்—ஆண்டாண்டுதோறும் அந்நியருக்குக் கொடுத்துக்கொண்டிருப்பதை நாம் இனியும் அனுமதிக்கத்தான் வேண்டுமா?

சர்வதேச டிரிபியூனலின் தீர்ப்பினைக் கண்டு காங்கிரசுக்காரர்கள் கொதிப்பதாகக் கதைக்கிறார்கள்! வெறும் வேடம் கட்டி ஆடும் அவர்களின் முட்டாள்தனத்தை, ‘மக்களிடமிருந்து மறைக்கவேண்டும்’ என்று முயற்சி செய்கிறார்கள்!

குற்றம், சர்வதேச டிரிபியூனலின் தீர்ப்பில் இல்லை; அந்தத் தீர்ப்பை ஒப்புக்கொள்வதாக 1965 ஜூன் 30-ல் காங்கிரசு ஆட்சியாளர் செய்துகொண்ட ஆண்மையற்ற ஒப்பந்தத்தில்தான் குறை இருக்கிறது!

கட்ச் ரண் பகுதிக்காகப் பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரில் இந்தியாவின் கைதான் ஓங்கியிருந்தது என்றாலும், காங்கிரசுத் தரப்புக் கோழைகள் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்து, நாட்டின் எல்லைகளை என்றைக்கு வேண்டுமானாலும்—யார் வேண்டுமானாலும் தகராறுக்குரியவையாக ஆக்கி ‘நியாயம்’ பேசுவதற்கு இலாயக்குள்ளவைகளாக ஆக்கிவிட்டார்கள்!

விநாடிக்கு ஒரு கூட்டம் போட்டு நாட்டு மக்களைப் பயமுறுத்துவதில் மட்டும் நாட்டின் ஒருமைப்பாடும், பிரதேச உரிமையும் அடங்கியிருப்பதாக நினைக்கும் காங்கிரசுக்காரர்கள், இருக்கும் எல்லைகளைக் காப்பாற்றிக்கொள்வதில் முழு மூடர்களாக நடந்துகொள்வதை நாடு நெடுநாட்களுக்கு அனுமதிக்க முடியாது!

மாநிலங்களுக்கான எல்லைகளில் இரு மாநிலங்கள் மூச்சைப் பிடித்துச் சண்டைபோடுமாறு பிரித்தாளும் கொள்கையைக் கடைபிடித்துக்கொண்டே, நாட்டின் ஒட்டுமொத்தமான எல்லைகளை ஆடுமாடுகளை ‘விற்பனை’ செய்வதுபோல் ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்கு விட்டுக்கொடுத்துவரும் காங்கிரசு ஆட்சி, விரைவில் ஒழிக்கப்பட வேண்டியதாகும்!

‘பிரிவினை உணர்ச்சி வளர்ந்தால் நாங்கள் முறியடிப்போம்’ என்று ஒப்பாரி வைக்கும் தமிழகக் காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம், வெளிநாட்டுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டிய சங்கடத்தில் மாட்டிக்கொண்ட மத்திய அரசைக் கண்டிக்க முன்வருவாரா?

‘இந்தியாவின் ஒருமைப்பாடு’ என்பது இன்னமும் உள்நாட்டு அரசியலின் உள்நோக்கம் கொண்ட ‘கோஷ’மாகக் காங்கிரசுக்காரர்களால் கொட்டி முழக்கப்படுகிறதே தவிர, வெளிநாடுகளுக்கு எல்லைகளை ‘விற்பனை’ செய்யாத விவேகத்தில் வெளிப்படுத்தப்படவில்லை!

# சட்டமன்றத்தில்..!

[ போகாத நிருபர் ]

திங்கட்கிழமையன்று நடந்த இரு சட்டமன்றக் கூட்டங்களிலும், இந்தியாவின் மொழிப் பிரச்சினை பற்றி இரண்டு புதிய கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன!

மத்திய அரசின் ‘சமநிலை’யற்ற மொழிக் கொள்கைதான், இதுபோன்ற இரு தீவிரக் கருத்துக்களும் தோன்றுவதற்குக் காரணம் என்பது, சற்று கூர்ந்து கவனிப்பவர்களுக்குப் புலனாகும்!

எந்த நிலையிலும், இந்தியை, ‘இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாகத் திணிப்பது’ என்பதுதான் மத்திய அரசின் கொள்கை என்பது தெளிவாகிவிட்டது; இந்த அநீதியை உணர்ந்த காரணத்தினால்தான், தமிழக மேலவையில் சுதந்தரா உறுப்பினர் ஆர். எம். சேஷாத்திரி, ‘இந்திக்குப் பதில் ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழி என்று ஏற்றுக்கொண்டால் இந்தியின்மூலம் வரும் மொழிச் சுமை குறையுமே’ என்ற கருத்தில், ‘அதற்கேற்றவகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும்’ எனத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்.

‘இது என்ன அந்நிய மோகம்’ என்றோ, ‘ஆங்கில விருப்பம்’ என்றோ காங்கிரசுக்காரர்கள் விமர்சிப்பதற்கு முன்னால், இந்தியினால் ஏற்படும் குந்தகம்தான், இதுபோன்ற ‘தீவிர யோசனை’களுக்கு வழி வகுக்கிறது என்பசனை முதலில் உணரவேண்டும்!

“தமிழக அரசின் பிப்ரவரி 23-ந் தேதிய தீர்மானம் நடைமுறைக்கு வந்தால், உறுப்பினரின் கோரிக்கை மாநில அளவில் நிறைவேறுகிறது” என்று கல்வி அமைச்சர் தந்த விளக்கத்துக்குப் பின், ஆர். எம். சேஷாத்திரி, தமது தீர்மானத்தைத் திரும்பப் பெற்றிருப்பது, காங்கிரசுக்காரர்கள் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

சட்டப் பேரவையில் ஆங்கிலோ—இந்திய நியமன உறுப்பினர் திருமதி சுரீஸ் தெரிவித்திருக்கும் சில உள்ளத்து உணர்வுகளையும் ‘புதுடில்லிவாதி’கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆங்கிலத்தின் அவசியத்தினை — உபயோகத்தினை மற்றவர்கள் பேசினால், இந்திக்காக வாதாடுபவர்கள் வெகு சுலபமாக, ‘அந்நிய மோகக்காரர்கள்; நாட்டுப் பற்று இல்லாதவர்கள்’ என்று எளிதில் கூறிவிடுகிறார்கள்.

★ நாகாலாந்து மாநிலம் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்கியிருப்பதனைக் காட்டி—

★ ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக்கொண்ட ஆங்கிலோ — இந்திய வகுப்பினர் இந்த நாட்டை தாயகமாகக் கொண்டுவிட்ட உண்மையினைக் காட்டி—

★ ஆங்கில மொழி பற்றி இந்தியத் தலைமை நீதி மன்றத் தீர்ப்பு ஒன்றினைச் சுட்டிக்காட்டி—

**‘ஆங்கிலமும் வட்டார மொழிகளைப்போல் ஒன்றாக மதிக்கப்பட வேண்டும்’** என்று அந்த அம்மையார் வாதாடியிருப்பதுடன், ‘ஆங்கிலம் அந்நிய மொழி என்றால், அவர்கள் விட்டுச் சென்ற நிர்வாக முறைகளும் அந்நியமில்லையா?’ என்று வினவியிருப்பது, காங்கிரசுக்காரர்களின்—இந்தி மொழி வாதிகளின் ‘சுதேசிக் கண்’களைத் திறக்க உதவுமென்று நம்புவோமாக!

★

‘ஒரு முன்னாள் ஆசிரியை’ என்ற அளவில் கழக உறுப்பினர் திருமதி பழனியம்மாள், கவர்னர் உரை மீதான தனது கருத்துக்களாக ஆசிரியர் நலனுக்காகவும் குறிப்பாக ஆசிரியைகளுக்காகவும், பென்ஷன்—வீட்டு வசதி போன்ற கோரிக்கைகளுக்காக வாதாடியிருக்கிறார்!

★

காங்கிரசு உறுப்பினர்களின் பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் தமிழகச் சட்டமன்ற மேலவை, கடந்த சனியன்று ‘கோரம்’ இல்லாததால் தனது வரலாற்றில் முதன்முறையாக, குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகக் கலைய நேர்ந்ததை சுட்டிக் காட்டியிருந்தோம்; அதுபோன்ற மற்றொரு வகை சிறப்பு, திங்களன்று நடந்திருக்கிறது.

★

‘பி. யு. சி. வகுப்பு வரையில் அனைவருக்கும் இலவசக் கல்வி’ என்ற காங்கிரசு உறுப்பினர் ஒருவரின் தீர்மானத்தை மேலவை ஏற்றுக்கொண்டிருக்கிறது!

“காங்கிரசு ஆட்சியிலிருந்தபோது ஒதுக்கிய கல்வித்துறைச் செலவுகளைவிட கழக நிர்வாகத்தில் அதிகமாக ஒதுக்கப்படுகிறது” என்ற அடிப்படை உண்மையினை, முதலில் எல்லாக் காங்கிரசுக்காரர்களும் உணரவேண்டும்!

**“வசதி படைத்தவர்களுக்கும் சலுகைகள் அளிப்பது சமுதாய நியதியுமல்ல—உண்மைச் சோஷலிசமுமல்ல” என்பதனை அவர்கள், அடுத்து உணரவேண்டும்!**

இந்த இரண்டு நிலைமைகளையும் புரிந்துகொள்ளாமல், ஆசிரியர்கள்—என்.ஜி ஓ.-க்கள்—ரூ. 200-க்கும் குறைந்த வருமானமுள்ள எல்லாத் தரப்பினர்—ஆகிய அனைவரது குழந்தைகளுக்கும் பி.யு.சி.-வரையில் இலவசக் கல்வி முறை இருக்கும்போது, ‘இயலாமை’ என்ற நிலை படைத்தவர்கள் இருக்க முடியாது என்பதனை உணராமல், காங்கிரசுக்காரர்கள், இன்னும் அதே பல்லவியைத் தொடருவது, அபசுரமாகத்தான் தோன்றுகிறது!

வசதி படைத்தவர்கள் கட்டணம் கொடுத்துப் படிப்பதற்குக் காங்கிரசுக்காரர்கள் காட்டும் எதிர்ப்பினை, இந்த அடிப்படையில்தான், மேலவையில், கழக உறுப்பினர் க. **அறிவழகன்** எதிர்த்திருக்கிறார்.

கழகத்துக்கு அப்பாற்பட்ட ஏ. ஆர். தாமோதரன், பி. எத்திராஜ போன்ற உறுப்பினர்களும், “பொருளாதார வசதி படைத்தவர்கள் பணமகொடுத்துப் படிப்பதற்கு ஏன ‘தடை’?” என்று வினவியிருப்பதும், ‘காங்கிரசு உறுப்பினரின் தீர்மானம் அரசியல் நோக்கமுடையதுதான்’ என்பதனை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது!

“கல்வியின் வளர்ச்சி, தரத்தின் அடிப்படையில் இருப்பதுதான் முக்கியம்—அளவின் அடிப்படையில் அல்ல” என்பதனைக் கூறி, ‘வசதிபடைத்தவர்களுக்கு இலவசச் சலுகைகளை அளிப்பதற்குப் பதில், அந்த நிதியினைக் கொண்டு கல்வி நிலையங்களின் வசதியினைப் பெருக்குவது பொருத்தமாக இருக்கும்’ என்று, கல்வி அமைச்சர் எடுத்துக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

★

“கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட 1967 மார்ச்சுத் திங்களிலிருந்து ஜூன் மாதத்துக்குள்ளாகவே பத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டு, அவைகளில் ஐந்து ஏற்கனவே இயங்கவும் ஆரம்பித்துள்ளது” என்ற **தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்** அவர்களின் கேள்விநேர பதில் ஒன்று, தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி நிறைவேற்றியுள்ள தொழில் துறை வளர்ச்சிபற்றிய அவதூறுத் தீர்மானம் ஒன்றினை தூளாக்குவதாக இருக்கிறது!

“நாடு முழுவதும், ‘தொழில் துறைத் தேக்க நிலை’யை அனுபவித்துவருவதற்கு, மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையின் சீர்கேடுகளே காரணமாகும்” என்ற உண்மை நிலையை உணராத காங்கிரசுக்காரர்கள், ‘எந்த ஒன்றுக்கும் டில்லியின் கதவைத் தட்டும் நிலையில்தான் மாநில அரசின் அதிகாரங்கள் இருக்கின்றன’ என்பதனை மறந்திருக்க முடியாது!

‘எங்கும் காங்கிரசு’ என்ற நிலை இருந்த அப்போதே அந்த நிலை என்றால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில், நிதிக்காகவும் ஒப்புதலுக்காகவும் டில்லியிடம் சலுகைகள் பெறுவது எத்துணைக் கடினம் என்பதும், காங்கிரசுக்காரர்களின் அனுபவ அறிவுக்குத் தெரிந்திருக்க வேண்டும்!

இரு தினங்களுக்கு முன்னர் பெங்களூரில் சந்திக்க நேர்ந்த மத்திய நிதியமைச்சரிடமும், தமிழகத்தின் நெசவாலை நிலைகள் பற்றி வலியுறுத்திவிட்டு வந்திருப்பதாகச் சொல்லியிருக்கும் தொழில் அமைச்சரின் அறிவிப்பு, ‘பெரிய பெட்டிச் சாவி’ வைத்திருப்பவர்களின் மனம் இளகினால்தான் எதுவும் முடியும்—என்ற உண்மையினையும், அந்தப் பெரிய பெட்டிச் சாவியை வைத்திருப்பது காங்கிரசு நிர்வாகம் என்பதனையும் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது!

அனைத்திந்திய அடிப்படை உள்ள கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர், சில நாட்களுக்கு முன்னர் தமிழகச் சட்டமன்றத்தில், ‘தொழில் அமைதியின்மை—தேக்க நிலை ஆகியவற்றுக்கு மத்திய அரசே பெரும் பொறுப்பு’ என்று பேசியிருப்பதனையும் காங்கிரசுக்காரர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

கழக நிர்வாகத்தில் உணவு நிலைமை சீரடைந்திருப்பதைப் பாராட்ட இயலாத காங்கிரசுக்காரர்களுக்கு, தொழில்துறை முன்னேற்றம் பற்றி அக்கறைகொள்வதற்கு என்ன உரிமை இருக்க முடியும்!

# மூடநம்பிக்கையில் முதலிடம் பெறும் இந்தி மாநிலம்!

## போலீசுத்துறை இருக்கையில் சோதிடரை நாடுகிறது உத்தரப் பிரதேச அரசு!

### ஜனசங்கத் தலைவர் மரணம் குறித்துப் புலனறிய இயலாத கையாலாகாத்தனம்!

இலட்சுமணபுரி, பிப். 21— சனசங்கத் தலைவர் உபாத்தியாய இரயிலில் பயணம் செய்துகொண்டிருக்கையில் திடீர் மரணமடைந்தார் அல்லவா? அவரது மரணம் தற்செயலாக நேர்ந்ததா அல்லது அவர் கொலை செய்யப்பட்டாரா என்பதை அறிய உத்தரப் பிரதேச அரசு, சோதிடர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கிறது.

ஓர் அரசாங்கம், சோதிடர்களைக் கலந்தாலோசிப்பது இதுதான் முதல் தடவையாகும்!

மரணமடைந்த உபாத்தியாயாவின் ‘ஜாதகத்’தைப் பரிசீலிக்குமாறும் அவரது ‘கிரக சஞ்சார’ நிலைமைகளை ஆராய்ந்து கூறுமாறும் இரண்டு பிரபல சோதிடர்களை உத்தரப் பிரதேச அரசு கேட்டுக்கொண்டுள்ளதாம்.

உபாத்தியாயாவின் திடீர் மரணத்தின் மர்மத்தை அறிய அவரது நண்பர்களும் உறவினர்களும் பெரிதும் முயன்று வருகின்றனர். இதன் பொருட்டு அவரது நாட்குறிப்பு ஏடுகளையும், ‘ஜாதக’த்தையும் அவர்கள் பரிசீலித்து வருகின்றனர்.

புதுடில்லியிலுள்ள சில பிரபல சோதிடர்களும் உபாத்தியாயாவின் ‘ஜாதக’த்தை ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. உபாத்தியாயாவின் மரணம் தற்செயலாக நேர்ந்ததா அல்லது அவர் கொலை செய்யப்பட்டாரா என்பது பற்றி அவரது ஜாதகத்தில் ஏதேனும் தடயம் இருக்கும் என்று அவர்கள் நம்பி வருகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, எழுமிழி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை—13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

ரோஜா பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்